بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 26/08/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 30 அன்னாரது காலத்தில் அரேபியாவுக்கு வெளியில் அநீதியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த எதிரிகளுடன் நடைபெற்ற போர்களைப் பற்றிய குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சிரியாவை நோக்கி அனுப்பிய படைகளைப் பற்றிக் கூறப்பட்டு வந்தது. அவை எதிரிகளின் அநீதிகளைத் தடுப்பதற்காக அனுப்பப்பட்டன. மூன்று படைகளைப் பற்றி கடந்த குத்பாவில் கூறப்பட்டு **விட்டது. நான்காவது படை ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுடையதாகும்.** அது பற்றி எழுதப்பட்டுள்ளதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுடைய தலைமையில் நான்காவது படையை சிரியாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் சிரியா செல்வதற்கு முன்பாக குஸாஆவின் ஒரு பகுதியில் ஸதக்காக்களை வசூலிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்கள். தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் அன்னார் மதீனா வரவழைக்கப்பட்டார்கள். மக்கள் அன்னாருடன் ஒன்று கூடுவதற்காக மதீனாவை விட்டு வெளியே சென்று கூடாரம் அமைக்குமாறு அன்னாருக்குக் கட்டளையிடப்பட்டது. அன்னார் புறப்பட நாடிய போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வழி அனுப்புவதற்காக சென்றார்கள். வலியுறுத்தியவாறு அறிவுரைகளை கூறினார்கள். ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள், 'நான் தங்களது எண்ணத்தை உண்மைப்படுத்தி காண்பிப்பதும் என்னைக் குறித்த தங்களது கருத்தைப் பிழையற்றதாக ஆக்குவதும் எவ்வளவு சிறந்தது!' என்று கூறினார்கள்.

அன்னாரது படை ஆறு, ஏழாயிரத்திற்கு இடைப்பட்ட எண்ணிக்கையில் இருந்தது. மேலும், இலக்கு பாலஸ்தீனமாக இருந்தது. அன்னார் ஓராயிரம் போராளிகள் கொண்ட படையை ஆயத்தம் செய்து, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்களுடைய தலைமையில் ரோம் நாட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். இந்தப் படை ரோமானியர்களுடன் மோதியது. எதிரிகளின் ஆற்றலைத் தவிடுபொடியாக்கி அவர்களை வென்றது. மேலும், சில கைதிகளுடன் திரும்பியது. ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் இந்தக் கைதிகளிடத்தில் விசாரித்ததில், ரோமானிய படை ருவைஸின் தலைமையில் முஸ்லிம்கள் மீது திடீர்த் தாக்குதல் தொடுக்க ஆயத்தத்தில் உள்ளது என்பது தெரியவந்தது. இந்தத் தகவல்களின் அடிப்படையில் அன்னார் தமது படையை சீரமைத்தார்கள்.

ரோமானியர்கள் தாக்குதல் தொடுத்த போது முஸ்லிம்கள் அவர்களின் தாக்குதலைத் தடுப்பதில் வெற்றி பெற்றார்கள். அவர்களைத் திரும்பிச் செல்லும் கட்டாயத்திற்குள்ளாக்கினார்கள். அதற்குப் பிறகு அவர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தி, எதிரிகளின் ஆற்றலை அழித்து அவர்கள் வெறுண்டோடி போர்க்களத்தை விட்டு விடும் கட்டாயத்திற்குள்ளாக்கினார்கள். இஸ்லாமிய படை அவர்களை விரட்டிச் சென்றது. ஆயிரக்கணக்கான ரோமானிய வீரர்கள் கொல்லப்பட்டனர். இத்தோடு இந்தப் போர் முடிவுற்றது.

ரோமானிய மன்னன் ஹெராக்ளியஸ் அந்நாட்களில் பாலஸ்தீனத்தில் இருந்தான். அவனுக்கு முஸ்லிம்களின் ஆயத்தங்களைப் பற்றிய தகவல்கள் கிடைத்ததும் அவன் அந்தப் பகுதிகளின் தலைவர்களை ஒன்று திரட்டினான். அவர்கள் முன் உணர்ச்சிமிகு சொற்பொழிவுகளை ஆற்றி அவர்களை முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் புரிய இணங்க வைத்தான். பாலஸ்தீனத்தின் மக்களை முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் புரிய இணங்க வைத்து அவன் டமாஸ்கஸ் வந்தான். அங்கிருந்து ஹிம்ஸ் மற்றும் அன்தாக்கியா சென்றடைந்தான். பாலஸ்தீனத்தைப் போன்றே இந்தப் பகுதிகளிலும் அவன் உணர்ச்சிமிகு சொற்பொழிவுகளை ஆற்றி, அங்குள்ள மக்களை முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் புரிய தூண்டினான். அவன் அன்தாக்கியாவைத் தலைமையகமாக ஆக்கி முஸ்லிம்களுக்கு எதிராகப் போரிட ஆயத்தங்களை மேற்கொள்ளத் தொடங்கினான். ஹெராக்ளியஸிடம் நிறைய படைகள் இருந்தன. எனவே, அவன் முஸ்லிம்களுடைய படைகளின் ஒவ்வொரு பகுதியையும் அவர்களது எதிரிகளைக் கொண்டு பலவீனப்படுத்துவதற்காக, முஸ்லிம்களின் ஒவ்வொரு படைக்கும் எதிராகத் தனித்தனி படைகளை அனுப்ப நினைத்தான்.

ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் ஜாபியாவுக்கு அருகில் இருந்த போது அவர்களிடம் ஒரு மனிதர், 'ஹெராக்ளியஸ் அன்தாக்கியாவில் இருக்கின்றான். அவன் உங்களுக்கு எதிராக எவ்வளவு பெரிய படையைத் தயார் செய்துள்ளான் என்றால், இதற்கு முன்பாக இப்படிப்பட்ட ஒரு படையை அவனது மூதாதையர்களில் எவரும் உங்களுக்கு முந்தைய சமுதாயங்களுக்கு எதிராக ஆயத்தப்படுத்தி இருக்கவில்லை' என்ற தகவலைக் கொண்டு வந்தார். எனவே அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குக் கடிதத்தின் வாயிலாக, ரோமானிய மன்னன் ஹெராக்ளியஸின் எண்ணங்களை பற்றித் தெரியப்படுத்தினார்கள். அன்னார் பதிலுக்கு, 'அன்தாக்கியாவில் அவன் தங்குவது அவனுக்கும் அவனுடன் இருப்பவர்களுக்கும் தோல்விக்கும், உங்களுக்கும் முஸ்லிம்களுக்கும் வெற்றிக்குமான முதல் படியாகும்' என்று எழுதினார்கள்.

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதற்கு பதிலாக, 'உங்களது கடிதம் எனக்குக் கிடைத்தது. அதில் நீங்கள் ரோமானியர்களின் படை ஒன்று கூடுவது பற்றி குறிப்பிட்டிருந்தீர்கள். எனவே, நினைவில் கொள்ளுங்கள்! அல்லாஹுத்தஆலா தனது நபி (ஸல்) அவர்களுடன் படை வீரர்களின் பெரும்பான்மையின் அடிப்படையில் நமக்கு வெற்றியை வழங்கவில்லை. நமது நிலை எவ்வாறு இருந்தது எனில், நம்மிடம் இரண்டு குதிரைகள் இருந்த நிலையில் நாம் அன்னாருடன் இணைந்து போர் புரிந்து இருக்கிறோம். மேலும், ஒட்டகத்திலும் கூட ஒருவர் பின் ஒருவராக சவாரி

செய்வோம். ஆனால், அவ்வாறிருந்தும் கூட அல்லாஹுத்தஆலா நமக்கு நமது எதிரிகள் மீது வெற்றியை வழங்கி, நமக்கு உதவி புரிந்துள்ளான்' என்று எழுதினார்கள்.

ஹஸ்ரத் யஸீத் பின் அபூ ஸுஃப்யான் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்களும் அங்குள்ள நிலைமைகளை எழுதியவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் உதவி வேண்டினார்கள். அதற்கு அன்னார், 'அவர்களுடன் நீங்கள் சண்டையிடும் போது உங்களுடன் இருப்பவர்களுடன் சேர்ந்து அவர்கள் மீது பாய்ந்து தாக்குதல் நடத்துங்கள். அல்லாஹுத்தஆலா உங்களை இழிவுபடுத்த மாட்டான். அல்லாஹுத்தஆலா நமக்கு அல்லாஹ்வின் கட்டளையினால் சிறிய கூட்டம் பெரிய கூட்டத்தின் மீது வெற்றி பெற்று விடும் என்று செய்தி வழங்கியுள்ளான். அவ்வாறு இருந்தும், நான் உங்களுக்கு உதவிக்காக போதுமான அளவுக்கு கூடுதலாக முஜாஹிதுகளை அனுப்பி வைக்கிறேன். நீங்கள் மேற்கொண்டு தேவையை உணர மாட்டீர்கள்' என்று எழுதினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹாஷிம் பின் உத்பா (ரலி) அவர்களை இஸ்லாமிய படைகளின் உதவிக்காக சிரியாவை நோக்கிச் செல்ல கட்டளையிட்டவாறு, 'முஸ்லிம்கள் எனக்குக் கடிதம் எழுதி நமது நிராகரிக்கும் எதிரிகளுக்கு எதிராக உதவி வேண்டி உள்ளார்கள். எனவே நீங்கள் உங்களுடன் இருப்பவர்களை அழைத்துக் கொண்டு அவர்களிடம் செல்லுங்கள். நான் மக்களை உங்களுடன் செல்வதற்கு ஆயத்தப் படுத்துகிறேன். நீங்கள் இங்கிருந்து புறப்பட்டு ஹஸ்ரத் அபூ உபைதாவை சென்று சேருங்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸயீது பின் ஆமீர் பின் ஹுஸைம் (ரலி) அவர்களை சிரியா போருக்காக அனுப்ப விரும்பினார்கள். ஹஸ்ரத் ஸயீது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். சிரியா போர் குறித்த தமது வேண்டுகோள்களை முன்வைத்தார்கள். ஜிஹாது செய்ய வேண்டும் என்ற ஆசையை வெளிப்படுத்தினார்கள். அப்பொழுது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஸயீது (ரலி) அவர்களுக்குப் போருக்காக ஆயத்தம் மேற்கொள்ளுமாறு கட்டளையிட்டவாறு, 'நான் சிரியாவை நோக்கி முஸ்லிம்களின் ஒரு படையை அனுப்பவுள்ளேன். அதற்குத் தலைவராக உம்மை நியமிக்கின்றேன்' என்று கூறினார்கள். பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இதை மக்கள் மத்தியில் அறிவிக்குமாறு ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு வழிகாட்டால் வழங்கினார்கள்.

ஹஸ்ரத் ஸயீது (ரலி) அவர்கள் புறப்பட எண்ணிய போது, ஹஸ்ரத் பிலால் (ரலி) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். 'நான் எனது இறைவனின் வழியில் ஜிஹாது செய்ய தாங்கள் எனக்கு அனுமதி தாருங்கள். எனக்கு, அமர்ந்திருப்பதைக் காட்டிலும் ஜிஹாது செய்வது மிகவும் பிடித்தமானதாகும்' என்று கூறினார்கள். அதற்கு அன்னார், 'நீங்கள் ஜிஹாது செய்ய விரும்புகிறீர்கள் என்றால் நான் உங்களுக்கு அமர்ந்திருப்பதற்கு ஒருபோதும் கட்டளையிட மாட்டேன். நான் நீங்கள் பாங்கு கூறவேண்டும் என்றே நாடுகிறேன். பிலாலே! எனக்கு உங்களது பிரிவால் பதற்றம் ஏற்படுகின்றது. ஆனால், மறுமை வரை சந்திப்பு ஏற்படாத, அப்படிப்பட்ட பிரிவு அவசியமானதாகும். பிலாலே! நீங்கள் நல்ல அமல்களை செய்து வாருங்கள். அது உலகிலிருந்து உங்களுக்கான பயண பொருளாகும். மேலும், நீங்கள் உயிர் வாழும்

வரை உங்களது நினைவை எஞ்சி இருக்கச் செய்யும். மேலும், நீங்கள் மரணம் அடையும் போது அதற்கான மிகச் சிறந்த நற்கூலி வழங்கப்படும்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், 'நான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எவருக்காகவும் பாங்கு கூறுவதற்கு விரும்பவில்லை' என்று கூறினார்கள். பிறகு அன்னார் ஹஸ்ரத் ஸயீது பின் ஆமிர் பின் ஹுஸைம் (ரலி) அவர்களுடன் புறப்பட்டார்கள்.

இதற்குப் பிறகு ஜிஹாது படைகள் மதீனாவுக்கு வருகை தருவது தொடர்ந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் மேலும் மக்கள் ஒன்று திரண்டார்கள். அன்னார் ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்களை அந்த மக்களுக்கு அமீராக நியமித்து அவர்களுக்குத் தமது சகோதரர் ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்யானுடன் இணைந்து கொள்ளுமாறு கட்டளை இட்டார்கள். அன்னார் புறப்பட்டு அவர்களுடன் சென்று இணைந்தார்கள். பிறகு ஹஸ்ரத் ஹம்ஸா பின் அபூபக்ர் ஹம்தானி (ரலி) அவர்கள் ஓராயிரம் எண்ணிக்கையிலடங்கிய அல்லது அதைவிட அதிக எண்ணிக்கை கொண்ட படையை அழைத்துக் கொண்டு அபூபக்ர் அவர்களிடம் வந்தார்கள். அன்னார் அவர்களது எண்ணிக்கை மற்றும் ஆயத்தத்தைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும், 'நாம் மூன்று அமீர்களை நியமித்துள்ளோம். நீங்கள் அவர்களில் யாருடன் விரும்புகிறீர்களோ அவருடன் சென்று சேர்ந்து கொள்ளுங்கள்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் முஸ்லிம்கள் மூலமாக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் அனுப்பப்பட்ட மூன்று அமீர்மார்களில் அனைவரை விட மேலான மற்றும் நபி கரீம் (ஸல்) அவர்களுடனான நெருக்கத்தின் அடிப்படையில் அனைவரை விட மிகவும் சிறந்தவர் ஹஸ்ரத் அபூ உபைதா பினில் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் ஆவார்கள் என்பதை அறிந்து, அவர்களிடம் சென்று சேர்ந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களால் ஒன்றன் பின் ஒன்றாக அனுப்பப்பட்ட கடிதங்களால், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை சிரியாவுக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது. அச்சமயம் அன்னார் ஈராக்கில் இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருக்கு சிரியா செல்லுமாறும் அங்கு இஸ்லாமிய படைகளுக்குத் தலைமை வகிக்குமாறும் கட்டளையிட்டார்கள். மேலும், ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களுக்கு, 'நான் சிரியாவில் முஸ்லிம்களின் படைகளுக்கான தலைமை பொறுப்பை காலித் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்து விட்டேன். நீங்கள் அவருடன் முரண்படாதீர்கள். பேச்சைக் கேளுங்கள். கட்டளைகளை செயல்படுத்துங்கள்' என்று எழுதினார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் முஸ்லிம்களுடன் புஸ்ரா சென்றடைந்த போது, அனைத்துப் படைகளும் அங்கு ஒன்று கூடி விட்டன. அனைவரும் அங்கு நடந்த போரில் அன்னாரைத் தங்களது அமீராக ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் நகரை முற்றுகையிட்டார்கள். இதனால், அங்குள்ள மக்கள் முஸ்லிம்களுக்கு ஜிஸ்யா கொடுப்பதாகவும் முஸ்லிம்கள் அவர்களது உயிர்கள், செல்வங்கள் மற்றும் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதன் அடிப்படையிலும் சமாதானம் செய்து கொண்டார்கள்.

பிறகு அஜ்னாதைன் போர் உள்ளது. அல்லது அஜ்னாதீன் என்றும் எழுதியிருக்கிறார்கள். இது குறித்து எழுதியுள்ளதாவது, புஸ்ராவின் வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் காலித் (ரலி), ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி), ஹஸ்ரத் ஷுரஹ்பீல்

**(ரலி) மற்றும் ஹஸ்ரத் யஸீத் (ரலி) ஆகியோரை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் அம்ர் பினில் ஆஸ் (ரலி) அவர்களின் உதவிக்காகப் பாலஸ்தீனத்தை நோக்கி புறப்பட்டார்கள். ஹஸ்ரத் அம்ர் அச்சமயம் பாலஸ்தீனத்தின் தாழ்வான பகுதிகளில் தங்கி இருந்தார்கள். இஸ்லாமிய படையுடன் வந்து சேர விரும்பினார்கள். ஆனால் ரோமானிய படை அவர்களைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தது. அவர்களைப் போர் செய்ய கட்டாயப்படுத்தும் முயற்சியில் இருந்தது. ரோமானியர்கள் முஸ்லிம்களின் வருகையைப் பற்றி கேள்விப்பட்ட போது, அவர்கள் அஜ்னாதைனை நோக்கி விலகினார்கள். ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் இஸ்லாமிய படைகள் பற்றி கேள்விப்பட்டதும் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டார்கள். எதுவரை என்றால், இவர்களுடன் வந்து இணைந்தார்கள். பிறகு அனைவரும் அஜ்னாதைன் என்ற இடத்தில் ஒன்று கூடினார்கள். மேலும், ரோமானியர்களுக்கு முன் அணிவகுத்து நின்றார்கள். ரோமானிய படைத்தளபதி முஸ்லிம்களுக்கு ஏதேனும் கொடுத்து திருப்பி அனுப்பி விட நாடினான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இதனைக் கேட்டதும் அவர்கள் முன்வைத்ததை மிகவும் ஏளனத்துடன் மறுத்துவிட்டார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் வெளியேறி படையை சீரமைத்தார்கள். அன்னார் மக்களிடையே அவர்களுக்கு ஜிஹாதைப் பற்றி ஊக்கமூட்டியவாறு சென்றார்கள். ஓரிடத்திலும் நிற்கவில்லை. மக்களிடம், 'நான் தாக்குதல் தொடுத்ததும் நீங்களும் தாக்குதல் தொடுங்கள்' என்று கூறினார்கள். இதற்குப் பிறகு இரண்டு படைகளும் கடுமையாக சண்டையிட்டன. ரோமானியர்கள் தப்பியோடி உயிரைக் காப்பாற்றிக் கொண்டார்கள். முஸ்லிம்களின் தலைவரை ஏமாற்றி கொலை செய்யும் முயற்சியில் தோல்வியுற்ற ரோமானிய தலைவன் வர்தான், ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் மற்றும் அவர்களுடைய சிப்பாய்களின் கைகளால் தனது தீய முடிவை எட்டினான். ரோமானியர்களுக்கு இந்தத் தகவல் கிடைத்ததும் அவர்கள் தன்னம்பிக்கை இழந்து விட்டார்கள். இந்தப் போரில் ரோமானியர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சமாகவும், முஸ்லிம்களின் எண்ணிக்கை 30 ஆயிரமாக, ஓர் அறிவிப்பின் அடிப்படையில் 35 ஆயிரம் ஆக இருந்தது. இந்தப் போரில் மூவாயிரம் ரோமானியர்கள் கொல்லப்பட்டனர். அவர்களது தோல்வியுற்ற படை இதர பல நகரங்களில் தஞ்சம் புகும் கட்டாயத்திற்குள்ளானது. அஜ்னாதைன் வெற்றிக்குப் பிறகு, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குக் கடிதத்தின் வாயிலாக இந்த நற்செய்தியை தெரிவித்தார்கள்.**

*இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அஜ்னாதைன் போர் எப்போது நடைபெற்றது என்பது தொடர்பான சந்தேகத்திற்கு விளக்கம் அளித்தார்கள். மேலும், டமாஸ்கஸ் வெற்றி குறித்த விளக்கங்கள் இன்ஷா அல்லாஹ் இனிமேல் எடுத்துரைக்கப்படும் என்று கூறினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهُ

وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ

ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)**